**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 185/2019**

**3ம் பிரதிவாதி தரப்பு சாட்சி–5 மிதுன்குமார் –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 13.07.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மிதுன்குமார் | கிராமம் | |
| த/பெ / க/பெ. | ரவி | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 35 |

**<u>முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கின் 3ம் பிரதிவாதி தரப்பு சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

| | | |
|---|---|---|
| 1. | 08.07.2026ம் தேதியிட்ட கணக்கு பட்டியல் – உண்மை நகல் | பி.சா.ஆ.8 |
| 2. | கடன் வாங்கியவர் அதை திருப்பி செலுத்திய பின்னிட்டு தனது ஆவணங்களை திரும்ப பெற்றுக் கொண்டு கையொப்பம் செய்த அலுவலக பதிவேடு – உண்மை நகல் | பி.சா.ஆ.9 |
| 3. | 09.07.2026ம் தேதியிட்ட 14.08.2024 முதல் 01.07.2025 வரையிலான வில்லங்க சான்றிதழ் – கணினி நகல் | பி.சா.ஆ.10 |

தாவா தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு, அவர் 2ம் பிரதிவாதிக்கு உரிமை மாற்றம் செய்து கொடுத்த ஆவணங்களின் அடிப்படையில்தான் 2ம் பிரதிவாதிக்கு கடன் வழங்கினோம் என்றால் சரிதான். கடன் பெற்ற போது 2ம் பிரதிவாதி எங்கள் நிறுவனத்திற்கு அடமான கடன் பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி கடனை திருப்பி செலுத்திய பிறகு நாங்கள் ரசீது பதிவு செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரிதான்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**